# கோலாலம்பூருக்கு முதலீட்டாளர்களை கவர திட்டம்

# மேயர் மைமுனா அறிவிப்பு

கோலாலம்பூர், செப்.11-

மாநகருக்கு புத்துயிரளிக்கும் தமது திட்டம், பொது மக்களுக்கான அத்தியாவசிய அடிப்படை வசதிகளை வழங்குவதன் மூலம் பழைய நிலைமையை மீண்டும் கொண்டுவருவது சம்பந்தப்பட்டதாகும் என்று கோலாலம்பூர் மேயர் டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனா முகமட் ஷாரிஃப் கூறினார்.

இத்திட்டம் தலைநகருக்கு முதலீட்டாளர்களை கவர்ந்திழுக்கும் என்று அவர் நம்புகிறார்.

ஒரு மேம்படுத்தப்பட்ட பொருளாதாரத்துடன் வாழ்வதற்கு தகுந்த பாதுகாப்பான தூய்மையான, நடமாடக்கூடிய மாநகரை உருவாக்க மக்களுக்கு இந்த அடிப்படை வசதிகள் கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

மாநகருக்கு மக்கள் திரும்ப இது ஊக்குவிக்கும் என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

மாநகர் மறுபிறப்பைப் பற்றி நாம் பேசும் போது முதலில் உள்ளூர்வாசிகளுக்கானதாக அது இருக்க வேண்டும். அவர்கள் மகிழ்ச்சியாக இருந்தால் முதலீட்டாளர்கள் வருவார்கள் என்றார் அவர்.

பொருளாதார நடவடிக்கையை முடுக்கிவிடவும் அடிப்படை வசதிகளை வழங்கவும் மாநகர் திரும்புவதற்கான ஆர்வத்தை இளையோர் மத்தியில் தூண்டிவிடவும் இது மிகமுக்கியம் என நினைக்கிறேன். இது இறுதியில் முதலிட்டாளர்களை கவரும் என்று மைமுனா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

உலகத்தர நிலையான மாநகர்கள் மீதான 15 ஆவது அனைத்துலக மாநாட்டை தொடங்கி வைத்த பின்னர் அவர் செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசினார்.



மக்கள், தொழில்கள் என அனைவருக்குமான ஒரு மாநகரை நிர்மாணிப்பதே தமது இலக்கு என்று அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே கோலாலம்பூரில் பசுமை பகுதிகள் அறிவிக்கப்பட்டிருக்கும் அனைத்து பொது இடங்களும் தம்முடைய பதவி காலத்தில் அந்த அந்தஸ்தை தொடர்ந்து பெற்றிருக்கும் என அவர் உறுதியளித்தார்.